**செய்தி வெளியீடு எண் : 570** **நாள் : 12.03.2025**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவின்படி மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (12.3.2025) ஆந்திரா மாநில முக்கிய கட்சி தலைவர்களை நேரில் சந்தித்தார்கள்.**

சென்னை தலைமைச் செயலகக் கூட்டரங்கில் (5.3.2025) அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி நாடாளுமன்ற தொகுதிகளின் மறுசீரமைப்பு தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள். அக்கூட்டத்தில் மேற்கொண்ட முடிவின்படி, தென் மாநிலங்களில் உள்ள முக்கிய கட்சித் தலைவர்களையும் அழைத்து விவாதிக்கப்பட வேண்டும் என்று முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள முக்கியக் கட்சி தலைவர்களை சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதத்தை ஒப்படைக்க, மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், ஆந்திர மாநிலத்திற்குச் சென்று ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு.ஜெகன் மோகன் ரெட்டி அவர்களை இன்று (12.3.2025) நேரில் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தை ஒப்படைத்து, மார்ச் 22ந்தேதி சென்னையில் நடைபெறும் **"நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தார்கள்".**

அதனைத் தொடர்ந்து, இன்று காலையிலேயே தெலுங்கு தேசம் கட்சியின் மாநில தலைவர் திரு.பல்லா சீனிவாசராவ் அவர்களையும் நேரில் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தினை ஒப்படைத்து, கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது;

இந்திய அரசாங்கம், நாடாளுமன்ற தொகுதிகளையெல்லாம் மறுவரையறை செய்ய வேண்டும் என்று முயற்சி மேற்கொண்டுள்ளார்கள். அப்படி மறுவரையறை செய்யப்பட்டால், தென்னக மாநிலங்களையெல்லாம் பாதிக்கப்படும். அதனால்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள் என்றும்,

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 5.3.2025 அன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி தலைவர்களை அழைத்து விவாதிக்கப்பட்டால் மட்டும் போதாது. தென்னகத்தில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள அரசியல் கட்சித் தலைவர்களை ஒருங்கிணைத்து கோரிக்கைகளை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்றும், 22.3.2025 அன்று சென்னையில் கூட்டம் நடத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தி.மு.க. சார்பாக குழு அமைத்து, அந்த குழு ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று, முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பி கூட்டத்தில் பங்கேற்க கேட்டுக்கொண்டுள்ளார்கள். அந்த வகையில் ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பிய குழுவில் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு மற்றும் மூத்த வழக்கறிஞர் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.பி.வில்சன் அவர்களுடன் நேரில் சென்று, அழைப்பு கடிதம் கொடுத்துவரச் சொன்னார்கள். அதற்காக நேற்று ஆந்திராவிற்கு சென்றார்கள்.

தெலுங்கு தேச கட்சியின் மாநிலத் தலைவர் திரு.பல்லா சீனிவாச ராவ் அவர்களை சந்தித்து அழைப்பு கடிதத்தைக் கொடுத்து, சென்னையில் நடைபெறும் கூட்டத்திற்கு வரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழைத்தார், மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசிவிட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு.ஜெகன்மோகன் ரெட்டி அவர்களை சந்தித்து அழைப்புக் கடிதம் கொடுத்துள்ளார். அவர் கட்டாயம் சென்னையில் நடைபெறும் கூட்டத்திற்கு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தின் 3வது கட்சியாக விளங்கும் ஜனசேனா கட்சியின் தலைவரும், துணை முதலமைச்சருமான திரு.பவன் கல்யாண் அவர்கள் தனிச் செயலாளர் திரு.வெங்கட கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., அவர்களிடம் அழைப்பு கடிதத்தை ஒப்படைத்து விடும்படியும், சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் தெரிவித்தார்.

எல்லா மாநிலங்களிலும் தொகுதி மறுசீரமைப்பு செய்தால், தென்னகத்தில் உள்ள கேராளவில் 8 தொகுதிகள், தமிழ்நாட்டில் 8 தொகுதிகள், தெலுங்கனா–ஆந்திராவில் 8 தொகுதிகள் குறைந்துவிடும்.

அப்படி குறைந்துவிட்டால், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தின் குரல்வளை நெரிக்கப்படும். எனவே, இவ்வளவு பிரதிநிதிகள் இருந்தும் தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது என தெரிவித்தார்கள்.

அதனால்தான், நம்முடைய உரிமை என்ற அடிப்படையில்தான், நம்முடைய கோரிக்கை வலுவாக இருக்க வேண்டும். தென்னகத்தில் அனைத்து கட்சித் தலைவர்களையும் ஒன்றாக திரட்டி கோரிக்கை வைக்க எல்லா மாநிலத்திலும் இந்த தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆந்திராவில் நண்பர்கள் மற்றும் வழக்கறிஞர்களும், சந்தித்த தலைவர்களும் சொன்னார்கள். இதனால் அதிக பாதிப்புகள் வரும். அதனால், இதில் அரசியல் பார்க்காமல் இதனை வலியுறுத்தி, இன்னும் 25 ஆண்டு காலங்களுக்கு தள்ளிப்போட வேண்டியதற்கு வழிவகைச் செய்ய வேண்டும். இதற்கெல்லாம் முன்னுதாரணம் இருக்கிறது. ஏற்கெனவே அம்மையார் இந்திரா காந்தி ஆளுகின்றபோது, 1971இல் இதுபோன்று தொகுதி மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று சொன்னபோது, ஏறத்தாழ 25 ஆண்டுகள் தள்ளிப்போட வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றினார். அதன்பிறகு 2002இல் தி.மு.க. பங்குபெற்ற அமைச்சரவை திரு.வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது, இதே கோரிக்கை வைத்தபோது, 2020 வரை தள்ளி வைப்பதற்கு சட்டத்திருத்தம் கொண்டு வந்தார். எனவே, இதுபோன்ற முன்னுதாரணங்கள் இருக்கிறது.

அதனால், மாண்புமிகு பிரதமர் திரு.மோடி அவர்களிடத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தென் மாநிலங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து, நமது கோரிக்கையை வலியுறுத்தி, இன்னும் 25

ஆண்டுகாலங்கள் தள்ளி வைக்க வேண்டும் என்கிற முயற்சியை தமிழ்நாட்டு முதலமைச்சர் எடுத்து இருக்கிறார்.

தென்னக மாநிலங்களில் இருக்கிற முக்கியக் கட்சியின் தலைவர்களுக்கு அழைப்பு கடிதங்கள், கூட்டு நடவடிக்கைக் குழுவின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், நாங்கள் ஆந்திராவிற்குச் சென்று அழைப்பு கடிதம் ஒப்படைக்கவும், கூட்டத்தில் பங்குபெறவும் வலியுறுத்தி வந்ததாக தெரிவித்தார்கள்.

தெலுங்கானவில் மூத்த அமைச்சர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.நேரு அவர்களும், ஒரிசாவிற்கு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன் அவர்களும், கேரளாவிற்கு மாண்புமிகு தகவல்தொழில்நுட்ப அமைச்சர் திரு.பழனிவேல் தியாகராஜன் அவர்களும் இதுபோன்று தென்னகத்தில் உள்ள மாநிலங்களுக்கு குழு அழைப்பு கடிதம் கொடுத்து, கூட்டத்தில் கலந்துகொள்ள அழைத்துள்ளார்கள் என்பதையும் விளக்கி கூறினார்கள்.

தென் மாநில முக்கிய கட்சித் தலைவர்களை அழைத்து, நாடாளுமன்ற மறுசீரமைப்புக் குறித்து கூட்டம் நடத்துவதன் மூலம் ஒன்றிய அரசு செவி சாய்க்குமா? என்ற கேள்விக்கு "முயற்சி திருவினையாக்கும்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

2024இல் நாடாளுமன்றத்தில், ஒன்றிய அமைச்சர் திரு.அமித்ஷா அவர்கள், தொகுதி மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

தொகுதி மறுசீரமைப்பு என்பது மக்கள் தொகை அடிப்படையில்தான் செய்யப்படும்.

அந்த வகையில், 1951, 1961, 1971 ஆகிய ஆண்டுகளில் மக்கள் தொகை அடிப்படையில்தான் தொகுதி மறுசீரமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இந்த காலகட்டங்களில் எல்லாம் தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டில் மக்கள் தொகை மிகுதியாக இருந்தது.

தற்போது, மக்கள் தொகை வெகுவாக குறைந்து விட்டது. ஏனென்றால், ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய

மாநிலங்கள் குடும்ப கட்டுப்பாட்டைப் பின்பற்றியதன் மூலமாக 100/100% சதவீதம் மக்கள் தொகை தென் மாநிலங்களில் குறைக்கப்பட்டு விட்டது என்றும், இதன் காரணமாக இந்தியாவின் பொருளாதாரம் வளர தென் மாநிலங்கள் உறுதுணையாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

தென் மாநிலங்களுடன் வடமாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உத்தரப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மக்கள் தொகை கூடுதலாக இருக்கிறது. அப்படி மக்கள் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தினால், தொகுதி வரையறை செய்யும்போது அவர்களுக்கு கூடுதலாக நாடாளுமன்ற தொகுதிகள் கிடைக்கும். ஆனால், தென் மாநிலங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, திரு.பி.வில்சன் பாராளுமன்ற உறுப்பினர் உடனிருந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu